***DEPOSITION OF WITNESS***
*(Chapter XXIII Code of Criminal Procedure)*
- - - - -

# *IN THE COURT OF SESSIONS, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.*

| | | |
|---|---|---|
| ***Case No.*** | : | ***SC No. 637 / 2018*** |
| ***Deposition of witness for*** | : | ***PW : 5*** |
| ***Name*** | : | திரு. பாண்டியன் |
| ***Father's Husband's Name*** | : | |
| ***Village*** | : | |
| ***Taluk*** | : | |
| ***Caste*** | : | |
| ***Calling*** | : | |
| ***Religion*** | : | |
| ***Age*** | : | |

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of* ***26.09.2025***

எதிரிகள் *1* முதல் *3* வரை ஆஜர். எதிரி-*4* ஆஜரில்லை. பிரிவு *317* குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை :**

நான் மதுரை மேலூர் சந்தைப்பேட்டையில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய நிலம் வைத்து, விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். சுமார் 10, 15 வருடங்களுக்கு முன்பு, மாலை சுமார் 03.00 மணியளவில் எனது அக்கா மூக்கம்மாளின் மகள் பிள்ளை பேத்தி தேவி என்பவரை, அய்யர்பங்களாவில் உள்ள அந்த பெண்ணின் சித்தப்பா பாஸ்கரன் என்ற முருகேசன் என்பவர் வீட்டில் இருந்து அவரது தாய்மாமா மற்றும் இரண்டு தம்பிகளோடு கடத்திச் சென்றுவிட்டார். ஆஜர் 2 வது எதிரி மனோஜ்குமாரை மட்டும் தெரிகிறது. மற்ற ஆட்களை நான் மறந்துவிட்டேன். அவர்கள் கடத்திச் சென்றதை நான் நேரடியாகப் பார்க்கவில்லை. தேவியின் சித்தப்பா சொல்லி எனக்குத் தெரியும். போலிசார் தேவியின் சித்தப்பா வீட்டிற்கு வந்து, படம் போட்டு வரைந்தார்கள். அதில் நான் கையொப்பம்

செய்தேன். என்னிடம் காட்டப்படும் 1வது கையொப்பம் என்னுடையது தான். **அந்த பார்வை மகஜர் அதசாஆ.2 ஆகும்.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :**

போலிசார் என்னை எந்த தேதியில் விசாரணை செய்தார்கள் என்று தற்போது ஞாபகம் இல்லை, பெண்ணை கடத்திய மறுநாள் மாலை 06.00 மணிக்கு விசாரணை செய்தார்கள். எந்த காவல் நிலையத்தில் இருந்து என்னை விசாரித்தார்கள் என்று ஞாபகம் இல்லை. அய்யர் பங்களா பக்கத்தில் உள்ள காவல் நிலையத்தில் இருந்து விசாரித்தார்கள். சம்பவம் நடந்ததாகச் சொல்லப்படும் இடத்திற்கு அருகில் நிறைய கடைகள் வீடுகள் உள்ளது என்றால் சரியல்ல. புகார்தாரர் முருகேசன் எனது பெரியப்பா மகன் ஆவார். அதனால் எனது பெரியப்பா மகன் கொடுத்த புகாருக்கு ஆதரவாக உண்மைக்குப் புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் சம்பவ இடத்தில் இருந்து கையொப்பம் செய்யவில்லை என்றும் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு, தற்போது உண்மைக்குப் புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் சம்பவ எதுவும் நடக்கவில்லை என்றும் எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை

***DEPOSITION OF WITNESS***

*(Chapter XXIII Code of Criminal Procedure)*

- - - - -

# *IN THE COURT OF SESSIONS,*
# *MAHALIR NEETHIMANDRAM, MADURAI.*

| | | |
|---|---|---|
| ***Case No.*** | : | ***SC No. 637 / 2018*** |
| ***Deposition of witness for*** | : | ***PW : 6*** |
| ***Name*** | : | **திரு. அசோகன்** |
| ***Father's Husband's Name*** | : | |
| ***Village*** | : | |
| ***Taluk*** | : | |
| ***Caste*** | : | |
| ***Calling*** | : | |
| ***Religion*** | : | |
| ***Age*** | : | |

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of* ***26.09.2025***

எதிரிகள் *1* முதல் *3* வரை ஆஜர். எதிரி-*4* ஆஜரில்லை. பிரிவு *317* குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை :**

நான் மேலூர் தாலுகா, தனியாமங்கலத்தில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். நீதிமன்றத்தில் ஆஜராகாத பாண்டியராஜன் என்பவரைத் தெரியாது. என்னிடம் காட்டப்படும் அதசாஆ.2 பார்வை மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு, காலையில், நானும், அசா5 பாண்டியனும் புகார் கொடுக்க காவல் நிலையத்திற்கு சென்றிருந்தேன். அங்கு வைத்து தான் நான் கையெழுத்து போட்டேன். முருகேசன் எனது சித்தப்பா மகன் ஆவார். கடத்தப்பட்ட பெண்ணிற்கு முருகேசன் சித்தப்பா ஆவார். போலிசார் என்னை விசாரித்தார்கள்..

(சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்வதற்கு

அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரியதன் பேரில் குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்)

**அரசு தரப்பில் கு.வி.**

போலிசார் விசாரணையின் போது, கடந்த 06.08.2012ம் தேதி 18.30 மணிக்கு நானும், அசா5ம் சம்பவ இடத்திற்கு அருகில் நின்று கொண்டிருந்த போது, அங்கு வந்த ஊமச்சிகுளம் காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள் எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு, பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றும் அதன் விபரம் அறிந்து நான் அதில் கையொப்பம் செய்தேன் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது எதிரிகள் எனது உறவினர்கள் என்றும் அதனால் எதிரிகளைக் குற்ற வழக்கில் இருந்து காப்பாற்றவேண்டும் என்பதற்காக உண்மைக்குப் புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :**

புகார்தாரர் எனது ஒன்றுவிட்ட தம்பி ஆவார். எனது தம்பி வீட்டிற்கு அருகில் நிறைய கடைகள் உள்ளது. நான் கையொப்பம் செய்ததாக சொல்லும் தாளில் எழுதாத வெற்றுக் காகிதத்தில் தான் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரியல்ல. படம் வரையப்பட்டதில் தான் கையொப்பம் வாங்கினார்கள். நானும் அசா5ம் காவல் நிலையத்தில் வைத்து தான் கையொப்பம் செய்தோம்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை